**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 670/2023 |
| Name | : Mahavishnu |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 31.10.2025

**1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**2 மற்றும் 3 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது குடிமங்கலம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.02.2022ம் தேதி நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் சமயத்தில் ரோந்து அலுவலாக உதவி ஆய்வாளர் அவர்களுடன் நானும், என்னுடன் பணிபுரியும் கோதண்டராமர் என்பவருடன் ரோந்து அலுவலாக புறப்பட்டு மடத்துக்குளம், கணேசபுரம், செங்கழனிபுதுார் ஆகிய இடங்களில் ரோந்து சென்றோம். உதவி ஆய்வளார் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவல்படி கிருஷ்ணாபுரம் சென்றோம் அங்கு பொது மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டிருந்த 3 நபர்களை காலை சுமார் 10.30 மணிக்கு பிடித்து உதவி ஆய்வாளர் அவர்கள் விசாரித்த போது அவர்கள் தங்கள் பெயர் சதீஷ்குமார், காமாட்சி சுந்தரம் மற்றும் மணிகண்டன் என்று கூறினார்கள் அவர்களை மேலும் விசாரிக்க அவர்கள் மீது ஏற்கனவே மடத்துக்குளம் காவல் நிலையத்தில் வழக்கு இருப்பது தெரிந்தும்

அவர்களை அதே இடத்தில் விட்டு வந்தால் பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும்இடையூறாக இருப்பார்கள் என்று எண்ணி 11.00 மணிக்கு அவர்களை உதவி ஆய்வாளர் கைது செய்தும் 11.30 மணிக்கு காவல் நிலையம் அழைத்து வந்து காவல் நிலைய குற்ற எண். 36/2022 ச/பி 151 Crpc மற்றும் 7(1)(a) CRLA Act ன் படி வழக்கு பதிவு செய்தார்கள். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

(1) காவல் நிலையத்தில் இருந்து காலை சுமார் 09.00 மணி அளவில் புறப்பட்டோம். இது சம்மந்தமாக நாட் குறிப்பில் பதிவு செய்யவில்லை. பொதுவாக நாட்குறிப்பில் ரோந்து பணி பதிவு செய்யப்படும் என்றால் சரிதான் உதவி ஆய்வாளர் செய்வார் நான் பதிவு செய்யமாட்டேன். உதவி ஆய்வாளர் ஒரு வாகனத்திலும் நாங்கள் இருவர் ஒரு வாகனத்திலும் சென்றோம். காவல் நிலையத்தில் இருந்து புறப்பட்டு மடத்துக்குளம், கணேசபுரம் வழியாக செங்கழனிபுதுார் ரோந்திற்கு சென்றோம்.

(2) உதவி ஆய்வாளருக்கு எத்தனை மணிக்கு ரகசிய தகவல் வந்தது என்றால் தெரியாது. 2ம் எதிரி மடத்துக்குளம் காவல் நிலைய எல்லைக்குள் சொந்தமாக வேன் வைத்து ஓட்டி வருகிறார் என்றால் அதைப் பற்றி தெரியாது. பொதுவாக காவல் நிலையத்தில் வேன் ஓட்டுநர்கள் வைத்து கலந்தாய்வு கூட்டம் நடக்கும் என்றால் சரிதான் அவ்வாறு கூட்டத்தில் நான் 2ம் எதிரியை பார்த்தேன். 2ம் எதிரி ஏதாவது கட்சியிலோ, இயக்கத்திலோ அல்லது தடை செய்யப்பட்ட இயக்கத்திலோ இருப்பதாக உதவி ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் தெரியாது.

(3) 1ம் எதிரியின் அப்பா சிவா டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் என்றால் அதைப் பற்றி தெரியாது. 1ம் எதிரி போலீஸ் விசாரணையில் சிவா டெக்ஸ்டைல்ஸ் பற்றி எதுவும் தகவல் கொடுத்தாரா என்றால் சிவா டெக்ஸ்டைல்ஸ முகவரி கொடுத்தார். அந்த முகவரியில் சென்று விசாரித்தோமா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் உடுமலை – பழநி சாலை முக்கிய சாலை என்றும் ஆட்கள் மற்றும் வாகன நெரிசல் அதிகம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் அருகில் உள்ள பொது மக்கள் யாரும் என்னிடமோ உதவி ஆய்வாளரிடமோ புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் உள்ள கடைக்காரர்களையோ

அல்லது பொது மக்களையோ உதவி ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் இரண்டு நபர்களை விசாரித்தார் அவர்கள் எந்த ஊர் என்று எனக்கு தெரியாது. நாங்கள் செல்லும் போது எதிரிகள் கிருஷ்ணாபுரம் பேருந்து நிறுத்தம் அருகே இருந்தார்கள். கிருஷ்ணாபுரத்தில் இரண்டு பேருந்து நிறுத்தம் உண்டு என்றால் சரியல்ல ஒரே இடத்தில் சாலையின் இருபக்கம் பேருந்து நிறுத்தம் உள்ளது. மடத்துக்குளத்தில் இருந்து உடுமலை செல்லும் திசையில் இடது புறம் உள்ள பேருந்து நிறுத்தத்தில் எதிரிகள் இருந்தார்கள். இதற்கு முன்பு எதிரிகள் மீது மடத்துக்குளம் காவல் நிலையத்தில் ஒரு வழக்கு தான் நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். அந்த வழக்கில் எதிரிகள் கைது செய்யப்பட்டார்களா என்றால் அதைப் பற்றி தெரியாது. விசாரிக்கும் போது வழக்கு இருப்பதாக சொன்னார்கள்.

(4) முந்தைய வழக்கு விவரங்கள் சொன்னார்கள் மடத்துக்குளம் காவல் நிலைய குற்ற எண். 35/2022 ச/பி 294(பி) மற்றும் 4(1)(i) TNP Act. இவ்வழக்கின் குற்ற எண்ணிற்கு முந்தைய குற்ற எண் தான் குற்ற எண் 35/2022 என்றால் சரிதான். சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், குற்ற எண். 35/2022 வழக்கில் கைது செய்யப்பட்டு காவல் நிலையம் கொண்டு வரப்பட்ட எதிரிகள் மீது புள்ளி விவர கணக்கிற்காக குற்ற எண். 36/2022 பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**3 ம் எதிரி தரப்பில் இதே குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.10.31 18:21:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 670/2023 |
| Name | : Gothandaraman |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 31.10.2025

**1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**2 மற்றும் 3 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது மடத்துக்குளம் ரோந்து வாகனத்தின் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.02.2022 ம் தேதி மடத்துக்குளம் காவல் நிலைய பணியில் இருந்த போது உதவி ஆய்வாளருடன், நானும், மகாவிஷ்ணுவும் ரோந்து பணிக்காக கழுகரை, கணேசபுரம், செங்கழனிபுதுூர் சென்றோம் அப்போது சுமார் காலை 10.30 மணி அளவில் கிருஷ்ணாபுரம் பேருந்து நிறுத்தம் அருகே பொது மக்களுக்கு இடையூறு செய்வதாக உதவி ஆய்வாளருக்குக் கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் நாங்கள் அங்கு சென்றோம் அப்போது மணிகண்டன், சதீஷ்குமார் மற்றும் காமாட்சி சுந்தரம் ஆகியோர் பேருந்து நிறுத்தத்தில் தேர்தலை நிறுத்தி விடுவோம் என்று சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள் உதவி ஆய்வாளர் அவர்களை விசாரித்தார் அவர்கள் மீது ஏற்கனவே வழக்கு இருப்பதை சொன்னார்கள். அவர்களை கைது செய்து காவல் நிலையம்

கொண்டு வந்தார்கள். உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் மடத்துக்குளம் காவல் நிலையத்தில் 3 வருடங்களாக வேலை செய்கிறேன். மடத்துக்குளத்தில் உள்ள சிவா டெக்ஸ்டைல்ஸ் கடையை தெரியும். 1ம் எதிரி சிவா டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளரின் மகன் என்றால் அதைப் பற்றி தெரியாது. 2ம் எதிரி காமாட்சி சுந்தரம் ஓட்டுநராக வண்டி வைத்து ஓட்டி வருகிறார் என்றால் சரிதான். ரோந்து பணிக்கு காலை 09.00 மணிக்கு இரண்டு வாகனங்களில் கிளம்பினோம். ரோந்து பற்றி நாட் குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் அதைப் பற்றி தெரியாது. உதவி ஆய்வாளருக்கு எத்தனை மணிக்கு ரகசிய தகவல் கிடைத்தது என்றால் தெரியாது. உடுமலை – பழநி சாலை போக்குவரத்து நிறைந்திருக்கும் என்றால் சரிதான்.அக்கம், பக்கம் கடைகள் மற்றும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான்.

(2) கிழக்கிலிருந்து மேற்கே செல்லும் திசையிலும் எதிரி திசையிலும் இரண்டு பேருந்து நிறுத்தங்கள் தனியாக உள்ளது என்றால் சரிதான். கிழக்கிலிருந்து மேற்கே செல்லும் திசையில் இடது பக்கம் உள்ள பேருந்து நிறுத்தம் அருகே நாங்கள் செல்லும் போது எதிரிகள் இருந்தார்கள். தேர்தலை நிறுத்திவிடுவோம் என்று சத்தம் போட்டதாக வழக்கு விசாரணையின் போது நான் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு அருகே உள்ள கடைக்காரர்களோ பொது மக்களோ புகார் கொடுத்தார்களா என்றால் அதைப் பற்றி தெரியாது. அங்கு யாரையாவது விசாரித்தார்களா என்றால் உதவி ஆய்வாளர் இரண்டு நபர்களை விசாரித்தார். அவர்கள் பெயர் ரவி மற்றும் கார்த்தி. அவர்கள் என்ன வேலை செய்கிறார்கள் மற்றும் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் தெரியாது.

(3) இந்த வழக்கிற்கு முன்பு தங்கள் மேல் வழக்கு இருப்பதாக எந்த எதிரி சொன்னார் என்றால் உதவி ஆய்வாளர் சொன்னார். அதன் குற்ற எண் மற்றும் சட்டப் பிரிவு தெரியுமா என்றால் தெரியும் குற்ற எண். 35/2022. இந்த வழக்கிற்கு முந்தைய குற்ற எண் என்றால் சரிதான். அந்த வழக்கில் இதே மூன்று பேர் தான் எதிரிகள் என்றால் சரிதான். அந்த வழக்கில் அவர்கள் கைது செய்யப்பட்டார்களா ஜாமீனில் வெளி வந்தார்களா

என்றால் அதைப் பற்றி தெரியாது. அந்த வழக்கில் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடுவிக்கப்பட்ட தேதியில் புள்ளி விவர கணக்கிற்காக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் சம்பவம் உண்மை என்றால் பொது மக்கள் யாரேனும் புகார் கொடுத்திருப்பார்கள் என்றும், சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், காவல் ஆய்வாளர் பதிவு செய்த பொய்யான வழக்கில் அவருக்கு ஆதவராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3 ம் எதிரி தரப்பில் இதே குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.10.31 18:21:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்